1981 ஏப்ரல் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

''மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 20,74,65000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றது. நாளை 15—4—1981 காலை 9·00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2·07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

253, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல்-முறைப்படுதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 19—2-1981 ஆம் தேதி யிடப்பெற்ற 419 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல்-முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது)

254. திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டம், சுந்தரபாண்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த பிச்சாண்டித்தேவர், தென்காசி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தபோது 12—11-1978 ஆம் தேதியன்று இறந்தது பற்றி விசாரணை செய்வதற்காக திரு ஆர். நடராஜன், ஐ. ஏ. எஸ். அவர்களைக் கொண்டு நியமிக்கப் பட்ட தனிநபர் விசாரணைக் குழுவின் அறிக்கை 1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

255. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 1980 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 69-அ பிரிவின் கீழ் பேரவையின்முன் வைக்கப்பெற்றது.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

125. கோரிக்கை எண். 6-பத்திரப் பதிவுத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, ஏப்ரல் 1981 (தமிழ், ஆங்கிலம்).